மாவட்டங்களைப் பொறுத்தவரையில் என்ன பிரச்சினை என்று சொன்னால், அங்கே துணை மின் நிலையம் அமைப்பதற்கு இடம் கிடைப்பது மிகவும் அரிதாக இருக்கின்றது. அங்கே low voltage *இருக்கின்றது; நாங்கள் இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், டெல்டா மாவட்டங்களைப் பொறுத்தவரையில், துணை மின் நிலையம் அமைப்பதற்கான இடத்தைத் தேர்வு செய்வது மிகவும் கடினமாக இருக்கின்றது. அங்கே விளை நிலங்களாக இருக்கின்ற காரணத்தினால் இடம் கொடுக்க மறுத்து வருகின்றார்கள். அதுபோன்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால்தான் காலதாமதமாகிக் கொண்டிருக்கின்றது. 'கஜா' புயலின் காரணமாக, 3 மாத காலமாக புதிய மின்னிணைப்புகள் வழங்கப்படவில்லை. ஏனென்று சொன்னால், இருக்கின்ற* materials *எல்லாவற்றையும் நிவாரணப் பணிகளுக்கு நாங்கள் பயன்படுத்திவிட்டோம். இப்பொழுதுதான் புதிதாக* materials *வந்துகொண்டிருக்கின்றன. இந்த மாதத்திலிருந்து அந்தப் பணியைத் தொடங்குவோம். அப்போது டெல்டா மாவட்டங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 54, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

54—

மகப்பேறு மருத்துவமனை

***2748—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

துறைமுகம் தொகுதி, 60-வது வட்டத்தில் மகப்பேறு மருத்துவமனையை மீண்டும் அமைக்க அரசு முன்வருமா?

2019 பிப்ரவரி 12]

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசை தடம் பிறழாமல் நடத்திவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், ஏழை மக்களுக்காக, வறுமைக் கோட்டிற்குக்கீழே வாழ்கின்ற மக்களுக்காக ரூ.2,000/– சிறப்புத் தொகுப்பு நிதியுதவியினை வழங்கி (மேசையைத் தட்டும் ஒலி) அனைவரின் வயிற்றிலும் பால் வார்த்தமைக்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

துறைமுகம் தொகுதி, 60–வது வட்டம், மண்ணடி ஆதாம் தெருவில் துறைமுகம் நகர ஆரம்ப சுகாதார மையம் செயல்பட்டு வருகிறது. மேலும், 60–வது வட்டத்திற்கு 5 கிலோ மீட்டர் சுற்றளவில் 49-வது வட்டம், சோலையப்பன் தெருவில் 24 மணி நேர மருத்துவமனையும், 2 கிலோ மீட்டர் சுற்றளவில் 51–வது வட்டத்தில் RSRM *24 மணி நேர மருத்துவமனையும் செயல்பட்டு வருவதால், அதே வட்டத்தில் மீண்டும் மகப்பேறு மருத்துவமனை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.*

திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்டது,* Seven Wells *தெருவிலே இயங்கி வந்த ஆரம்ப சுகாதார நிலையம் தற்போது மூடப்பட்டுள்ளது. துறைமுகம் தொகுதியில் ஒட்டுமொத்தமாக 8 ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன. அதில் கிழக்குக் கடற்கரைச் சாலையில் செயல்பட்டு வந்த 4–வது ஆரம்ப சுகாதார நிலையம் 6 மாதங்களுக்கு முன்பு மூடப்பட்டது. ஜுல்ஸ் சாலையில் செயல்பட்டு வந்த ஆரம்ப சுகாதார நிலையம் தற்போது* BRN *பகுதியிலே இணைக்கப்பட்டது. அதேபோல வடமலைப்பிள்ளை தெருவில் செயல்பட்டு வந்த ஆரம்ப சுகாதார நிலையம்* P.K. Garden *பகுதியிலே இணைக்கப்பட்டதால், 8 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருந்த நிலையில், தற்போது 5 ஆரம்ப சுகாதார நிலையங்களாகக் குறைந்திருக்கின்றன. கருவிலே*

இருக்கின்ற குழந்தையும் தாயும் நலம் பெற வேண்டுமென்றால், அது ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலமாகத்தான் நடைபெற முடியும். ஏழையெளிய மக்கள்தான் ஆரம்ப சுகாதார நிலையங்களைப் பயன்படுத்துகிறார்கள். ஒருவேளை, 'கரு' என்பது ஆரம்பம் என்பதால், அதற்கு ஆரம்ப சுகாதார நிலையம் என்று பெயர் வைத்ததாகக் கருதுகிறேன். ஒருகாலத்தில் அரசு மருத்துவமனைகளை, 'தரும ஆஸ்பத்திரி' என்று அழைப்பார்கள். மருத்துவச் சேவையே தருமம் என்ற அடிப்படையில், ஏழையெளிய மக்கள் ஆரம்ப சுகாதார நிலையங்களைப் பயன்படுத்துகின்றார்கள். சென்னையிலே 22 சட்டமன்றத் தொகுதிகள் இருக்கின்றன. 15 தொகுதிகளில்தான் மகப்பேறு மருத்துவமனைகள் இருக்கின்றன. ஆகவே, அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் மகப்பேறு மருத்துவமனையை உருவாக்கித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016 ஆம் ஆண்டில் சென்னை மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்டபோது, ஏற்கெனவே 10 மண்டலங்களாகச் செயல்பட்டு வந்த பகுதிகளை 7 மண்டலங்களாகக் குறைத்தும், விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் 8 மண்டலங்களைப் புதிதாகச் சேர்த்தும் 15 மண்டலங்களாக மாற்றியமைக்கப்பட்டது. தேசிய நகர்ப்புற சுகாதாரக் கழகத்தின் வழிகாட்டுதலின்படி, 50,000 மக்கள்தொகை கொண்ட பகுதிக்கு ஒரு நகர ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையில், 2.5 இலட்சம் மக்கள்தொகை கொண்ட பகுதிக்கு ஒரு நகர சமுதாய நல மையம் என்ற அடிப்படையில் மாற்றியமைக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவ சேவைகள் துறையில், தேசிய நகர்ப்புற சுகாதாரத் திட்டத்தின்கீழ் மண்டலத்திற்கு ஒரு 24 மணி நேர மகப்பேறு மருத்துவமனை என்ற அடிப்படையில், ஒரு 24 மணி நேர மருத்துவமனை செயல்பட்டு வருகிறது.

துறைமுகம் தொகுதி, 60-வது வட்டம், மண்ணடி ஆதாம் தெருவில் துறைமுகம் நகர ஆரம்ப சுகாதார மையம் செயல்பட்டு வருகிறது. மேலும், 60-வது வட்டத்திற்கு 5 கிலோ மீட்டர்

2019 பிப்ரவரி 12]

சுற்றளவில், 49–வது வட்டம், சோலையப்பன் தெருவில் 24 மணி நேர மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. அதேபோல RSRM *24 மணி நேர மருத்துவமனையும் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய ஒவ்வொரு வட்டத்திற்கும் மருத்துவமனை வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், நம்முடைய சுகாதாரத் துறையும் பல்வேறு இடங்களிலே தேவையான மருத்துவ வசதிகளைச் செய்து வருகிறது.*

முற்பகல் 10–30

நம்முடைய மாநகராட்சி சுகாதாரத் துறையைப் பொறுத்தவரையில், இதற்கு முன்னால் எந்த அளவிற்குச் செயல்பட்டு வந்ததோ, அதேபோன்று இப்போதும் அதனைப் பராமரித்துக் கொண்டிருக்கின்றோம். இப்போது அதிகமாக Health Department*–உடைய சேவை கிடைப்பதால் நாங்கள் அதிக அளவில் சேவையினைச் செய்து கொண்டிருக்கின்றோம். நம்முடைய உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சரின் பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, நிறைவேற்றித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.*

திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆரம்ப சுகாதார நிலையங்களைக் கருவுற்றிருக்கின்ற தாய்மார்களின் முழுநேர சிகிச்சைக்கு பலனுள்ள ஒரு சுகாதார நிலையமாக இன்றைக்கு ஏழையெளிய மக்கள் பயன்படுத்திக்கொண்டு வருகின்றார்கள். இந்த மருத்துவமனையில் கிட்டத்தட்ட 64 மருத்துவப் பணியிடங்கள் காலியாக உள்ளன. அந்த மருத்துவர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமித்திருக்கின்றார்கள். கருவுற்றிருக்கின்ற தாய்மார்களுக்கு 9 மாத கால சிகிச்சைக்குப் பிறகு பிரசவத்திற்குண்டான வசதிகள் தொடர்ந்து அந்த மருத்துவமனையில் இருந்தால், தாய் மற்றும் சேயின் நலன் பாதுகாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கருவுற்றிருக்கின்ற தாய்மார்களுக்குப் போதிய ஆய்வுக்கூடங்கள்*

இல்லை. உதாரணத்திற்கு ultrasound என்று சொல்லப்படுகின்ற அந்தக் கருவி அனைத்து மருத்துவமனைகளிலும் இல்லை. அதேபோல் கர்ப்பப்பை புற்றுநோயைக் கண்டுபிடிக்கக்கூடிய Magnavision என்ற சிறிய அளவிலான கருவி அனைத்து மருத்துவமனைகளிலும் இல்லை. இதனை முழுமையாக ஏற்படுத்திக் கொடுத்தால், கருவுற்றிருக்கின்ற அந்தத் தாய்மார்களுக்குப் பிறக்கின்ற குழந்தைகள் வருங்கால சந்ததியினர் என்பதால், நல்ல ஆரோக்கியத்தோடு பிறப்பதற்கான ஒரு சூழ்நிலை அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு மருத்துவம் இரண்டு வகைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. ஒன்று, மருத்துவ வசதி, இன்னொன்று வசதி மருத்துவம். வசதி மருத்துவம் பணம் படைத்தவர்களுக்குச் சென்று சேருகின்ற மருத்துவம். மருத்துவ வசதி என்பது ஏழையெளிய மக்களுக்குப் பயன்படுகின்ற மருத்துவம். அந்த மருத்துவத்திற்கு மாநகராட்சியைத் தேடிச் செல்கின்ற நிலை இருப்பதால், மாநகராட்சி மருத்துவமனைகளுக்குப் போதிய வசதியை ஏற்படுத்தித் தர இந்த அரசு முன்வர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் ஆட்சியில் சுகாதாரத் துறை பல்வேறு சாதனைகளைப் படைத்துள்ளது. குறிப்பாக, நம்முடைய மாநகராட்சியைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு பகுதியிலும் இருக்கின்ற மருத்துவமனைகளைப் சிறப்பான முறையில் பராமரித்து வருகின்றோம். அதேபோல், பல்வேறு சிகிச்சைகள் இங்கே அளிக்கப்படுகின்றன. சிறு, சிறு உடல் உபாதைகளுக்கான சிகிச்சை, நீரிழிவு நோய் மற்றும் இரத்தக் கொதிப்பு போன்ற நோய்களைக் கண்டறிந்து சிகிச்சை அளித்தல், அனைத்து வகை காய்ச்சலுக்கும் சிகிச்சை அளித்தல், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான புற நோயாளிகள் சேவை, கர்ப்பக்கால பரிசோதனை, onlineமூலம் கர்ப்பம் பதிவு செய்தல், கர்ப்பிணி தாய்மார்களுக்குத் தடுப்பூசி போடுதல், இரத்த அழுத்தம் மற்றும் எடை பார்த்தல், அடிப்படை சோதனைகளான இரத்த வகை கண்டறிதல், haemoglobin,

2019 பிப்ரவரி 12]

சிறுநீர் பரிசோதனை, 100 சதவிகிதம் HIV ஆலோசனை மற்றும் பரிசோதனை, நீரிழிவு நோய் மற்றும் கர்ப்பக்கால இரத்த அழுத்த நோய் உள்ள கர்ப்பிணித் தாய்மார்களைக் கண்டறிதல் ஆகிய அனைத்தும் மேம்படுத்தப்பட்ட ஆய்வுக்கூட உபகரணங்களைக் கொண்டு இலவசமாக செய்யப்படுகின்றன. அதேபோல் ultrasonogram பரிசோதனை, காச நோய்க்கான பரிசோதனை மற்றும் சுகப் பிரசவத்திற்கான சிகிச்சை, பிரசவத்திற்குப் பிறகு குடும்ப நல அறுவை சிகிச்சை, தேவைப்படும் தாய்மார்களுக்கு கருக்கலைப்பு போன்ற அனைத்தும் செய்யப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புற்றுநோய் சம்பந்தமாகக் கேட்டார்கள். நாங்கள் கண்டிப்பாக மாண்புமிகு முதலமைச்சரின் பார்வைக்கு எடுத்துச்சென்று அதனையும் ஏற்படுத்தித் தருவோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 55, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

55—

நீதிமன்றக் கட்டடங்கள்

***6762—டாக்டர் V.P.B. பரமசிவம்:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூரில் உள்ள மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களைத் தனித்தனிக் கட்டடங்களில் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) வேடசந்தூரில் இயங்கிக் கொண்டிருக்கின்ற குற்றவியல் நீதிமன்றம் மற்றும் உரிமையியல் நீதிமன்றங்களுக்குத்